ACHARYA SCHOOL OF DESIGN
LIBRARY
Date........
BENGALURU - 560 107

32407

Reg. No.

IV Semester B.A./B.Sc./B.C.A./B.Com./B.Sc.(Fad)/B.B.A./B.H.M./B.P.A./B.V.A. (All Courses) Degree Examination, September/October - 2022

**TAMIL LANGUAGE**

(CBCS 2020-21 Scheme Onwards Freshers & Repeaters)

Paper : IV (Part - I)

Time : 3 Hours Maximum Marks : 70

I. **அனைத்து வினாக்களுக்கும் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** (5×1=5)

1. சிறுபாணாற்றுப்படை எத்தனை அடிகளால் ஆனது.
   1. 400 அடிகள் 2. 300 அடிகள்
   3. 250 அடிகள் 4. 269 அடிகள்
2. எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று
   1. குறுந்தொகை 2. மணிமேகலை
   3. வில்லிபாரதம் 4. சிலப்பதிகாரம்
3. ஔவைக்கு நெல்லிக்கனி தந்தவன்
   1. ஆய் 2. அதியமான்
   3. நள்ளி 4. பாரி
4. அசைகள் எத்தனை வகைப்படும்?
   1. இரண்டு வகை 2. ஐந்துவகை
   3. நான்கு வகை 4. ஆறு வகை
5. பதினெண்கீழ்க் கணக்கு நூல்களுள் ஒன்று
   1. நற்றினை 2. மணிமேகலை
   3. நாலடியார் 4. சிறுபாணாற்றுப்படை

[P.T.O

**II. எவையேனும் நான்கு வினாக்களுக்குச் சுருக்கமான விடை தருக.** (4×5=20)

1. நல்லியக்கோடனின் குணநலன்களை விளக்கி வரைக.
2. தலைவி இல்லறம் நடத்தும் முறைகுறித்து செவிலித்தாய் நற்றாய்க்கு உரைத்ததைக் காட்சிப்படுத்துக.
3. காக்கைப்பாடினியார் நச்செள்ளையார் பாடிய புறநானூற்றுப் பாடலின் பொருளை விளக்குக.
4. 'சொல்வன்மை' என்ற அதிகாரத்திலிருந்து முதல் ஐந்து குறட்பாக்களின் கருத்துகளைத் தொகுத்து வரைக.
5. கல்வியின் சிறப்பினை பழமொழிப் பாடல்கள் வழிநின்று விளக்குக.
6. நாம், எப்படிப்பட்டவரை நட்பாக்கிக்கொள்ள வேண்டும் என்பதை நாலடியார் பாடல்கள் வழி விளக்குக.

**III. எவையேனும் நான்கிற்கு இடம் சுட்டிப் பொருள் விளக்கம் தருக.** (4×3=12)

1. நடைமெலிந்து அசைஇ நல்மென் சீறடி கல்லா இளைஞர் மெல்லத் தைவர.
2. இல்லோர் வாழ்க்கை இரவினும் இளிவெனச் சொல்லிய வன்மை தெளியக் காட்டி.
3. யானை புக்க புலம்போலத் தானும் உண்ணான் உலகமும் கெடுமே.
4. மனத்துக்கண் மாசுஇலன் ஆதல் அனைத்து அறன் ஆகுல நீர பிற.
5. ஆற்றாது அவர்அழுத கண்ணீர் அவையவர்க்குக் கூற்றமாய் வீழ்ந்து விடும்.
6. அடுக்கிய மூவுலகும் கேட்குமே சான்றோர் கொடுத்தார் எனப்படும் சொல்.

**IV. எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடை தருக.** (4×3=12)

1. தமிழ் எழுத்துகளின் வகையும், தொகையும் குறித்து எழுதுக.
2. வஞ்சி உரிச்சீரினைச் சான்றுடன் கூறுக.
3. தொடை என்றால் என்ன? எதுகை, மோனைத் தொடையினைச் சான்றுடன் விளக்குக.
4. நேரசை, நிரையசையைச் சான்றுடன் கூறுக.
5. எடுத்துக்காட்டு உவமை அணியானை விளக்கி வரைக.
6. தற்குறிப்பேற்ற அணியானைச் சான்றுடன் விளக்குக.

V. **'மருது பாண்டியன்' என்னும் நாடக நூலிலிருந்து பின்வருவனவற்றிற்கு திறனாய்வு வடிவில் விடை தருக.** (1×8=8)

1. வேலு நாச்சியாரின் வீரம்

**(அல்லது)**

ஜெனரல் ஆக்னியூவின் பாத்திரப் படைப்பு.

2. 'வெள்ளை மருதுவின்' பாத்திரப் படைப்பு (1×8=8)

**(அல்லது)**

இந்நாடகம் காட்டும் தமிழர்களின் வீரம்

VI. **ஏதேனும் ஒன்று குறித்துக் கோப்புத் தயார் செய்க.** (1×5=5)

1. உங்கள் தொழிற்சாலையில் புதிதாக தயாரித்திருக்கும் இருசக்கர வாகனம் விற்க, கருநாடக மாநிலத் தலைநகரமான பெங்களூருவில் கிளை அலுவலகத்தைத் திறக்கக் கோரி உதவி மேலாளர் என்ற நிலையில், அதன் நிருவாக இயக்குநருக்குக் கோப்பு ஒன்று தயார் செய்து அனுப்புக.

2. ஒருவர் சாதிச் சான்றிதழ் கேட்டு விண்ணப்பித்திருக்கும் நிலையால், நீவிர் சாதிச் சான்றிதழ் வழங்கும் பிரிவின் அதிகாரி என்ற முறையில், வட்டாட்சியருக்கு கோப்பு ஒன்று தயார் செய்து அனுப்புக.

---